04.08.2025.

கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

SC No.43 /2021

அ.சா.18

பெயர். திருமதி.பூங்குழலி

சாட்சி மீண்டும் நீதிமன்ற உத்தரவின் பேரில் அழைத்து சத்தியபிராமணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதன்மை சாட்சியம் தொடர்ச்சி.

என்னால் அந்த கோடாரியை பார்த்தால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி சரியாக கோடாரியை அடையாளம் காண்பித்தார். அது சா.பொ.1 ஆகும். எதிரி தீபக்ராஜ், சசி என்கிற கஸ்தூரி, ஆகியோர்களை காவல் நிலையத்தில் ஆய்வாளரிடம் ஒப்புவித்த போது, நான் ஒரு தனி அறிக்கையையும் சமர்ப்பித்தேன். அந்த தனி அறிக்கை அ.சா.ஆ.9. ஆகும். மேற்படி தீபக் ராஜ் என்பவரையும், சசி என்கிற கஸ்தூரி என்பவரையும், பார்த்தால் என்னால் அடையாளம் காண்பிக்க முடியும். சாட்சி அவர்களை சரியாக அடையாளம் காண்பித்தார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னையும், என் உதவியாளரையும் விசாரணை செய்தார்கள்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

ஆய்வாளர் என்னை 02/05/2017 தேதியில் காவல் நிலையத்தில் வைத்து மாலை 3 மணியளவில் விசாரணை செய்தார். என்னிடம் காண்பிக்கப்படும் தனி அறிக்கையை யார் எழுதியது என்றால் நான்தான் எழுதினேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் தற்போதும் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வருகிறேன். தனி அறிக்கையில் உள்ள வாசகங்களுக்கும், நான் செய்துள்ள கையெழுத்திற்கும் இடையே வித்தியாசம் உள்ளது என்றால், இரண்டுக்கும் வித்தியாசம் இல்லை. நான் சுமார் 3:00 மணிக்கு காவல் நிலையம் சென்று தனி

அறிக்கை கொடுத்தேன். நான் காவல் நிலையத்தில் கான்ஸ்டபிள் ஒருவரிடம் தனி அறிக்கை கொடுத்தேன். அவர் பெயர் ஞாபகம் இல்லை. நான் தனி அறிக்கை கொடுத்த போது, ஆய்வாளர் அங்கு இல்லை. காவலரிடம் தான் கொடுத்தேன். 3.30 மணிக்கு ஆய்வாளர் காவல் நிலையம் வந்து விட்டார். 4.30 மணிக்கு நாங்கள் அங்கு சென்றோம். சென்ற தடவை நான் நீதிமன்றம் வந்தபோது அப்போதும் ஒரு கோடாரி இருந்தது என்றால், அதை நான் பார்க்கவில்லை. நான் அதைப் பார்த்து அந்த கோடாரி தான் என்று காண்பித்தேன் என்றால் சரியல்ல. கோடாரியை எடுத்துக் கொடுத்த போது அங்கு எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் சுமார் 10 பேர் இருந்தார்கள். யார், யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. 3.30 மணிக்கு ஆய்வாளர் வந்தபோது நான் கொடுத்த தனி அறிக்கையில் ஆய்வாளர் கையெழுத்து ஏதாவது ஒப்புதலுக்காக கொடுத்தாரா? என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அதன்பிறகு என்னை காவல் துறையினர் விசாரணை செய்யவில்லை. நான் தற்போது பாக்கம் தெற்கில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். அன்று நான் அலுவலக பணிகளில் இருந்தபோது, என் அலுவலகத்திற்கு சுமார் 12 மணியளவில், வந்தார்கள். நான் எதிரிகளிடம் ஆதார் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை போன்ற எதையாவது வாங்கி இன்னார்தான் என்று உறுதிப்படுத்திக் கொண்டேனா? என்றால் இல்லை. எதிரிகள் என்னிடம் சரண்டர் ஆவதற்கு முன்பு எனக்கு இந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்றால் சரிதான். எனக்கு வழக்கைப்பற்றி தெரியும். ஆனால் பாடி கிடந்து தகவல் கொடுத்தது பற்றி தெரியும். சம்பவம் பற்றி தெரியாது. என்னிடம் எதிரிகள் ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதற்கு முன்பு எனக்கு இந்த வழக்கு காவல்துறை விசாரணையில் நிலுவையில் இருந்து வந்தது என்பது தெரியும். அந்தப் பிரேதம் கிடந்தது என்பதை பற்றி என்னிடம் காவல்துறையினர் விசாரணை செய்தார்கள். என்னை இதுகுறித்து ஆய்வாளர் விசாரணை செய்தார்கள். அதன் பிறகு எதிரிகளை ஆஜர் செய்த பிறகு இரண்டாவது முறையாக என்னை விசாரணை செய்தார்கள். என்னை இரண்டு முறை விசாரணை செய்தார்கள். முதலில் விசாரணை செய்தபோதே எதிரிகள் பற்றி ஆய்வாளர் என்னிடம் தெரிவித்தார். அதன் பிறகு தான் எதிரிகளை என்னிடம் ஆய்வாளர் ஆஜர் செய்தார். சம்பவ இடத்திலிருந்து

வாக்குமூலம் பெற்ற பிறகு நேரடியாக காவல் நிலையத்திற்கு உடனடியாக சென்று விட்டோம் என்றால் சரிதான். அதன் பிறகு வேறு எங்கும் செல்லவில்லை என்றால், சுமார் 4.30 மணிக்கு வண்டியும், கோடாரியும் கைப்பற்றினோம். நான் அந்த நிலத்திற்கு செல்லும்போது ஆய்வாளர் அங்கு இல்லை. அதன்பிறகு தான் வந்தார். ஆய்வாளர் அங்கு நிலத்தில் இருந்த 10 பேர்களில் வேறு யாரையாவது விசாரணை செய்து, வாக்குமூலம் பெற்றாரா? என்றால் பெற்றார். வேல்முருகன் என்பவரை எனக்கு அந்த கிராமத்திற்கு வேலைக்கு செல்வது முதல் தெரியும். எனக்கு இந்த வழக்கு பதிவு செய்வதற்கு முன்பாகவே அந்த காவல் நிலையத்தில் இருப்பவர்களை தெரியும். நிலத்திற்கு நானும் எனது உதவியாளரும் முன்பாகவே சென்று விட்டோம். நாங்கள் ஒரு கான்ஸ்டபிளுடன் சென்றோம். அதன் பிறகு அங்கு ஆய்வாளர் வந்தார். அந்த காவலரிடம் தான் இந்த கோடாரியை எடுத்து ஒப்படைத்தார்கள். அந்த கோடாரியை கான்ஸ்டபிள் தான் போட்டோ எடுத்தார். எத்தனை போட்டோ எடுத்தார்கள் என்று தெரியாது. கைபேசியில் போட்டோ எடுத்தார். நான் போட்டோ எடுக்கும்போது பக்கத்திலேயே இருந்தேன். அங்கு எத்தனை மணிக்கு நீண்ட நேரம் கழித்து ஆய்வாளர் வந்தார் என்றால், நாங்கள் சென்று, பொருட்களை கைப்பற்றிய பிறகு அரை மணி நேரம் கழித்து ஆய்வாளர் அங்கு வந்தார். நான் சொல்வது எல்லாம் பொய் என்றும், ஆய்வாளர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, நான் அரசு அலுவலர் என்பதால், அரசு வழக்கிற்கு அனுசரனையாக தவறுதலாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு முன்பாக ஆஜர் 1, 2 எதிரிகள் சரணடையவில்லை என்றும், என் முன்னிலையில் எந்த வாக்குமூலமும் அளிக்கவில்லை என்றும், ஏற்கனவே எதிரிகளை ஆய்வாளர் பிடித்து வைத்திருந்தார் என்றும், எங்கள் முன்னிலையில் எந்த சான்று பொருட்களையும் காவல்துறையினர் கைப்பற்றவில்லை என்றும், எந்த கோடாரியையும் கைப்பற்றவில்லை என்றும், நான் தவறாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை.**